DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:56/2021** **Deposition of Witness for : P.W.21**

| | | | |
|---|---|---|---|
| Name | : புவனா | Calling | மருத்துவர் |
| Father's Name | : மாடசாமி | Taluk | |
| Age | : | District | |
| Village | : | | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 16-02-2026

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது அரசு பணியில் இருந்து ஓய்வு பெற்று ஹைதராபாத்தில் வசித்து வருகிறேன். கடந்த 24.10.2018 ஆம் தேதி அதிகாலை 2.35 மணிக்கு நான் கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் முதுநிலை மருத்துவராக பணியில் இருந்தபோது மூலனூர் காவல் நிலையத்தை சேர்ந்த காவலர் முத்துப்பாண்டி என்பவர் அடையாளம் தெரியாத ஆண் பிரதத்தை சடல கூறாய்வுக்காக சவக்கிடங்கில் வைக்க அனுமதி கோரி என்னை அணுகினார். அவ்வாறு மேற்படி பிரேதத்தை சவக்கடங்கில் வைக்க நான் உத்தரவிட்டேன். .அதை விபத்து பதிவேட்டு அறிக்கையில் பதிவு செய்தேன் மேற்படி **விபத்து பதிவிட்டு அறிக்கை அ.சா.ஆ.25** இது தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி என்னிடம் புலன் விசாரணை தொடர்பாக ஏதேனும் கேள்விகளை எழுப்பி பதில் பெற்றுள்ளாரா என்றால் நினைவில்லை. மேற்படி விபத்து பதிவேட்டு அறிக்கை தவிர வேறு எந்த ஆவணங்களையும் நான் இந்த வழக்கில் கொடுக்கவில்லை. பொதுவாக என்னிடம் பிரேதம் எதுவும் ஒப்படைக்கப்பட்டால் அதில் உள்ள காயங்களை

விபத்து பதிவேட்டு அறிக்கையில் நான் குறிப்பிட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல அது குறித்து அவசர சிகிச்சை பிரிவிலும் பதிவு செய்யமாட்டார்கள். கட்டாயமாக மருத்துவ கவுன்சில் விதிமுறைப்படி பிணத்தின் மீதுள்ள காயங்களை விபத்து பதிவேட்டு அறிக்கையில் குறிப்பிட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக ஒரு பிணத்தை சவக்கடங்கில் வைக்க வேண்டும்போது மேற்படி பிணத்தின் பிணவிரைப்பு தன்மை குறித்து விபத்து பதிவேட்டு அறிக்கையில் குறிப்பிட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பிணத்தில் ஆடை மற்றும் அணிகலன் குறித்தும் விபத்து பதிவேட்டு அறிகையில் குறிப்பிட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

2. மேலும் விபத்து பதிவேட்டு அறிக்கையில் இறப்புக்கான காரணம் குறிப்பிடப்பட வேண்டும் என்று சொன்னால் சரியில்லை. வழக்கில் நான் ஒரு இறந்து போன நபரின் பிரேதத்தை என்னிடம் ஒப்படைக்கும் போது என்னென்ன வழிமுறைகளை பின்பற்ற வேண்டுமோ அதை பின்பற்றாமல் செயல்பட்டு உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் மேற்படி பிரேதம் ஒப்படைக்கப்பட்டபோது அதில் எந்தவிதமான காயமும் இல்லாததால்தான் அது குறித்து நான் விபத்து பதிவிட்டு அறிக்கையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.16 21:44:41 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.